**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I (இணையம் மூலமானது) – 2020 (மீள் பரீட்சை)**

# உரோமானிய சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **<u>மூன்று (03)</u>** வினாக்களுக்கு **<u>மட்டும்</u>** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. " 'சட்ட மூலங்கள்' எனும் சொல்லானது பல அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது. சட்டம் என்னவாக இருந்தது என்பதற்கான வரலாற்று ரீதியான சான்றுகளாகிய அசல் மூலங்கள் என்று அழைக்கப்படக்கூடியவற்றுக்கு எதிராக சில நியாயாதிக்கங்களில் இது சட்டம் ஆக்கப்பட்ட வழிகளைக் குறிக்கின்றது."

   உரோமானிய சட்ட மூலங்களின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை மதிப்பிடுக.

   (100 புள்ளிகள்)

2. டிடியஸ் என்பவன் உரோமில் ஓர் திராட்சை ரச வியாபாரி என்பதுடன் அவனது திராட்சைத் தோட்டத்தில் பணியாற்றிய பல அடிமைகளை அவன் சொந்தங் கொண்டுமிருந்தான். டிடியஸ் அவ் அடிமைகளில் ஒருத்தியான அனீஸா என்பவளுடன் உறவொன்றை வளர்த்திருந்ததுடன் அவள் பின்னர் சுருசு என அழைக்கப்பட்ட ஓர் மகனைப் பெற்றாள். புரூட்டஸ் மற்றும் சொருஸ் ஆகிய இரு உரோமானியப் பிரஜைகளும் டிடியஸிற்காகப் பணியாற்றினர். புரூட்டஸ் மற்றும் சொருஸ் ஆகியோர் டிடியஸைப் பற்றி தவறாகப் பேசியமை தொடர்பில் அவன் வெறுப்படைந்தான் என்பதுடன் அவர்களது விசுவாசமற்ற நடத்தைக்காக அவர்கள் இருவரையும் அடிமைகளாக்கினான். டிடியஸ், சுருசினை ஊக்குவிக்க விரும்பினான் என்பதுடன் திராட்சை ரசத்தினை விநியோகம் செய்வதற்காக வியாபாரி ஒருவனுடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபடுவதற்காக அவனை நகரத்திற்கு அனுப்பினான். சுருசிற்கு ஒப்பந்ததில் ஈடுபடுவதற்கான சட்ட அந்தஸ்து இல்லை எனக் கூறிய அவ் வியாபாரி சுருசுடன் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு மறுத்தான். பின்னர் டிடியஸ், சுருசு மற்றும் வேறு இரண்டு அடிமைகளை விடுவிக்க விரும்பியதுடன் அவ்வாறு

செய்வதற்கான அவனுடைய எண்ணத்தை அப் பிரதேசத்தினுடைய நீதவான் ஒருவருக்கு வெளிப்படுத்தினான்.

மேற்போந்த சூழ்நிலையில் எழுந்துள்ளதான சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதுடன் டிடியஸிற்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

3. சொத்துக்களைக் கையகப்படுத்தலுடன் தொடர்புடைய சட்டத்தினைப் பிரயோகம் செய்வதன் மூலம் பின்வருஞ் சூழ்நிலைகளை ஆராய்க. சொந்தம் மறுக்கப்படுமிடத்து நட்டஈடு எனும் அம்சம் தொடர்பிலும் நீர் கவனம் செலுத்த வேண்டப்படுகின்றீர்:

(i) புரூட்டஸ் என்பவன் அவனது குதிரை வண்டியில் காடொன்றினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த வேளை காட்டு வாத்துகளைக் கண்டான். அவன் அவற்றில் பத்து வாத்துகளை வீட்டுக்கு எடுத்து வந்ததுடன் அவற்றை அவனது பண்ணையில் விட்டான். ஒரு வாரத்தின் பின் அதில் ஐந்து வாத்துகள் அவனது அயலவனான மார்கஸ் என்பவனின் தோட்டத்திற்குள் சென்றன. புரூட்டஸிற்கு அவற்றின் மீது எந்த உரிமையும் இல்லை எனக் கூறி மார்கஸ் அவ் ஐந்து வாத்துகளையும் திருப்பித்தர மறுத்தான்.
எஞ்சியிருக்கும் ஐந்து காட்டு வாத்துகள் மற்றும் அயலவனின் தோட்டத்திற்குள் சென்ற ஐந்து காட்டு வாத்துகள் மீது புரூட்டஸ் சொந்தத்தினைக் கோர முடியுமா?

(ii) புரூட்டஸ், சைரஸ் என்பவனின் சொந்தத்திற்கு எதிராக மூன்று வருடங்களாக பண்ணை ஒன்றினை உடைமை கொண்டிருந்தான். இதற்கிடையில், பதினெட்டு மாதங்களுக்கு முன்பு புரூட்டஸ் சுகவீனமடைந்ததுடன் அவன் பண்ணையை விட்டு மருத்துவ சிகிச்சைக்காக நகரத்திற்குச் சென்றதுடன் மூன்று மாதங்களில் திரும்பினான். மேலே குறிப்பிடப்பட்ட மூன்று வருடங்களின் முடிவில் ஒரு நாள் காலையில் அவன் வெளியில் சென்று மாலையில் பண்ணைக்குத் திரும்பிய போது சைரஸ் மற்றும் அவனது குடும்பத்தினர் அவர்களது விலங்குகளுடன் பண்ணையில் குடியிருப்பதைக் கண்டான்.
பண்ணையினுடைய உரிமையாளர் யார்?

(iii) கடுமையான பருவகால மழைப் பொழிவின் பின்னர் புரூட்டஸ் ஆறொன்றின் அருகாமையில் காணப்பட்ட அவனது நெல் வயலுக்குச் சென்றிருந்தான். ஆறானது அதன் பாதையை மாற்றியிருந்ததுடன் அதன் விளைவாக அவனது நெல்

வயலினையொட்டி ஓர் மேலதிக நிலப்பகுதி உருவாக்கப்பட்டிருப்பதை அவன் கண்டான். அம் மேலதிக நிலமானது உயரமான மேட்டுப் பகுதியொன்றில் அமைந்திருந்ததான மார்கஸினுடைய காணியிலிருந்து கழுவிவரப்பட்ட மணலினால் நிறைந்திருந்தது.
புரூட்டஸ் மேலதிக காணியைச் சுற்றி வேலியிடுவதுடன் காணி மற்றும் அதிலுள்ள மணல் தொடர்பில் சொந்தம் கோர முடியுமா?

(iv) புரூட்டஸ் காடொன்றினூடாக வந்து கொண்டிருக்கும் போது வரைபடமொன்று செதுக்கப்பட்டுள்ள செப்பிலான தட்டொன்றினைக் கண்டான். அவன் அவ் வரைபடத்தில் வழங்கப்பட்டுள்ள திசைகளைப் பின்தொடர்ந்து சென்றதுடன் சைரஸிற்குச் சொந்தமான காணியில் புதையலொன்றைக் கண்டான். புரூட்டஸ் காணியைத் தோண்டியதுடன் அங்கிருந்து புதையலை எடுத்தான்.
புதையலின் உரிமையாளர் யார்?

(v) சைரஸினுடைய திராட்சைத் தோட்டத்திலிருந்து புரூட்டஸ் திராட்சைகளைப் பறித்ததுடன் டைடுஸ் என்பவனை வேலைக்கமர்த்தி திராட்சை ரசம் தயாரித்தான். புரூட்டஸ், சைரஸ் மற்றும் டைடுஸ் ஆகியோரில் யார் திராட்சை ரசத்தின் சொந்தத்தினை கோர முடியும்?

(20 X 5 = 100 புள்ளிகள்)

4. பின்வரும் சூழ்நிலைகளில் திறத்தவர்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் ஆராய்க:

அ. காடுஸ் என்பவன் பொருட்களின் ஒப்படைப்புக்கான போக்குவரத்தினை ஒழுங்கு செய்வதற்கு உடன்பட்டவனான யூலியஸ் என்பவனுக்கு 200 பீப்பாய்கள் சிவப்பு திராட்சை ரசத்தினை விற்பதற்கு உடன்பட்டான். இப் பரிமாற்றத்திற்கான முற்பணமாக யூலியஸ் பெயரளவிலான தொகையொன்றினைச் செலுத்தியதுடன் மிகுதியானது ஒப்படைப்பின் போது செலுத்தப்பட வேண்டியிருந்தது. ஒப்படைப்புக்கு முன்னர் காட்டுஸினுடைய களஞ்சியசாலையில் தீ பிடித்தது என்பதுடன் திராட்சை ரசத்தின் மொத்தக் கையிருப்பும் அழிவடைந்தது. செலுத்த வேண்டியதான மிகுதிக் கொடுப்பனவினை காடுஸ் கோருகிறான்.

(30 புள்ளிகள்)

ஆ. கஸ்கஸ் மற்றும் ஸ்பார்டாகஸ் ஆகியோர் சகோதரர்கள் என்பதுடன் அவர்கள் 49 குதிரைகளைக் கூட்டு சொந்தத்தில் கொண்டிருந்தனர். அவர்களுக்கிடையிலான இலாபங்களைப் பகிர்ந்து கொள்வதில் எப்பொழுதுமே அவர்களுக்கிடையில்

பிரச்சினைகள் காணப்பட்டமையினால் அவர்களது பங்குகளைப் பிரிப்பதற்கு அவர்கள் வழக்கொன்றைத் தொடுத்தனர். இறுதித் தீர்மானம் எய்தப்படும் வரையில் குதிரைகளை வைத்துக் கொள்ளுமாறு அவர்கள் அக்குதிரைகளை அவர்களது மாமனான பற்றியன் என்பவனிடம் ஒப்படைத்தனர். தன்னுடைய சார்பில் வழக்கு நடவடிக்கைகளைப் பார்த்துக் கொள்ளுமாறு கஸ்கஸ் மார்கஸ் என்பவனை நியமித்தான். பற்றியன் அக் குதிரைகளிலொன்றை அவனது மகனான பல்புஸ் என்பவனுக்கு கொடையளித்தான். குதிரைகளை கஸ்கஸ் மற்றும் ஸ்பார்டாகஸ் ஆகியோருக்கிடையில் சமமாகப் பிரிக்குமாறும் எஞ்சிய ஒரு குதிரையினை விற்று அதன் பணத்தை சமமாகப் பிரிக்குமாறும் நீதவான் தீர்ப்பளித்தார். இதற்கிடையில், தனது வேலைகளைக் கவனிக்காது மார்கஸ் நாட்டை விட்டுச் சென்றிருப்பதை கஸ்கஸ் அறிந்தான்.

பற்றியன் மற்றும் மார்கஸ் ஆகியோர் எந்தளவிற்கு பொறுப்பாவார்கள்?

(40 புள்ளிகள்)

இ. கஸ்கஸ் அவனது வருங்கால மனைவிக்காக வைர மோதிரமொன்றைக் கொள்வனவு செய்தான். அவனது சகோதரி வலென்சியா என்பவள் திருமணமொன்றிற்கு அணிந்து செல்வதற்காக அவனிடம் அம் மோதிரத்தினைத் தரும்படி கேட்டதுடன் அதற்குப்பிறகு அதனைத் திருப்பித்தருவதாகவும் உடன்பட்டாள். அம் மோதிரமானது திருமண வைபவத்தில் திருடப்பட்டது. திருமணம் நடைபெற்ற அதே இடத்தில் மோதிரத்தைத் திருடியவனான பல்புஸ் மோதிரத்துடன் பிடிபட்டான். இருப்பினும், வலென்சியாவினைக் கத்தியால் குத்திய பின்னர் பல்புஸ் தப்பிச் சென்றான்.

வலென்சியா மற்றும் பல்புஸ் ஆகியோர் எந்தளவிற்கு பொறுப்பாவார்கள்?

(30 புள்ளிகள்)

5. எமிலியன் என்பவன் உரோமில் வசித்துவந்த மிகவும் கௌரவமான ஓர் வைர வியாபாரியாவான். அவனது வசிப்பிடத்தில் அவன் மூன்று வேலையாட்கைளைக் கொண்டிருந்தான. எமிலியனுடைய மனைவி யூலியானா என்பவள் அவர்களது வீட்டு உபயோகப் பொருட்கள் சில அவர்களது வீட்டிலிருந்து காணாமற் போகின்றமை தொடர்பில் கண்டறிந்ததுடன் அதைப்பற்றி எமிலியனுக்கு அறிவித்தாள். இது தொடர்பில் தனது வேலையாட்களிடம் அவன் விசாரித்தான் என்பதுடன் அவர்கள் எந்தவொரு தொடர்பையும் மறுத்தும் இருந்தனர். எமிலியன் வேலையாட்கள் மூவரையும் இரகசியமாகக் கண்காணித்தான் என்பதுடன் தனது இடத்திலிருந்து திருடப்பட்ட இரண்டு விலையுயர்ந்த திராட்சை ரசப் போத்தல்களுடன் அவ் வேலையாட்களில் ஒருவனான பல்புஸ் என்பவனைப் பிடித்தான். எமிலியன் இதனை தேவாலயத்தில் அனைவரதும் முன்னிலையில் வெளிப்படுத்தியதுடன் பல்புஸினுடைய சேவையையும் முடிவுறுத்தினான்.

கோபமடைந்த பல்புஸ் அடுத்த தினமே எமிலியனுடைய வேலைத் தளத்திற்குச் சென்றதுடன் அவனுடைய வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய வேலையாட்களின் முன்னிலையில் அவனைத் தடியொன்றினால் தாக்கினான். பல்புஸ் எமிலியனுடைய மகன் கஸ்கஸ் என்பவனை அவனுடைய தலையில் தாக்கினான் என்பதுடன் அதன் விளைவாக அவன் ஒரு கண்ணின் பார்வையை இழந்தான். அங்கிருந்து புறப்படும் முன், யூலியானா மற்றைய இரு வேலையாட்களுடனும் தவறான உறவொன்றில் இருந்ததாக பல்புஸ் சத்தமிட்டான். மேலும், பல்புஸ் எமிலியனுடைய வண்டி மற்றும் குதிரைகளை ஓர் இரும்புக் கம்பியினால் சேதப்படுத்தியதுடன் குதிரைகளில் ஒன்று இறந்தது. அவன் அங்கிருந்து புறப்படும் போது எமிலியனால் அவனுக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக உபகரணங்கள் தனக்குச் சொந்தமானவை எனக் கூறிக்கொண்டு ஓர் பை முழுவதிலும் நகைகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் போட்டு எடுத்துக் கொண்டான்.

எமிலியனுக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

6. புரூட்டஸ் என்பவனுக்கு காடுஸ் மற்றும் பல்புஸ் ஆகிய இரண்டு இயற்கையான மகன்களும் மார்கஸ் எனும் ஓர் மகவேற்புச் செய்யப்பட்ட மகனும் அவனது அதிகாரத்தின் கீழ் காணப்பட்டனர். புரூட்டஸ் தனது மொத்த சொத்திற்கும் ஒரேயொரு வாரிசாக அவனது இளைய சகோதரனின் மகனான கஸ்கஸ் என்பவனை நியமித்து உயிலொன்றினை விட்டுச் சென்றான். கஸ்கஸ் அச் சொத்தினை ஏற்பதற்கு இணக்கம் கொண்டிருந்தான். அதே உயிலில் புரூட்டஸ் வயல் காணியொன்றினை அவனது நண்பனான பற்றியன் என்பவனுக்குக் கொடையளித்தான். குறிப்பிட்ட வயல் காணியானது ஓர் துணி வியாபாரிக்குச் சொந்தமானது என்பதை புரூட்டஸ் அறிந்திருக்கவில்லை. மொத்த சொத்தினுள்ளும் கஸ்கஸைப் பிரவேசிக்குமாறும் அவ் உயிலின் கீழ் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள கொடையினைக் கைமாற்றுமாறும் பற்றியன் கோரினான். புரூட்டஸ் அவ் வயல் காணியினைச் சொந்தம் கொண்டிருக்கவில்லை என்பதனால் தான் அவ்வாறு செய்ய முடியுமா என கஸ்கஸ் சந்தேகமடைந்தான்.

(i) காடுஸ், பல்புஸ் மற்றும் மார்கஸ் ஆகியோர் குறித்த உயிலினை அவர்கள் சவாலுக்குட்படுத்த முடியுமா எனவும் புரூட்டஸினால் விட்டுச் செல்லப்பட்ட அச் சொத்தில் ஏதேனும் பங்குகளைக் கோர முடியுமா எனவும் அறிய விரும்புகின்றனர்.

(ii) (அ) பற்றியன் குறித்த உயிலின் கீழ் வழங்கப்பட்ட கொடையின் வலிதாந் தன்மை தொடர்பில் அறிய விரும்புகிறான்.

(ஆ) குறித்த உயிலின் கீழான அவ் வயல் காணியானது பற்றியனுக்குக் கொடையளிக்கப்பட்டது தொடர்பில் அறியாது முன்னைய உரிமையாளரிடமிருந்து

அதனை ஏற்கனவே பற்றியன் கொள்வனவு செய்தமையின் மூலம் அது அவனுக்குச் சொந்தமாகக் காணப்படின் மேலுள்ள (அ) பகுதிக்கான உமது விடை வேறுபடுமா?

திறத்தவர்களுக்கு அவர்களுடைய சட்ட நிலை, உரிமைகள் மற்றும் கிடைக்கக்கூடியதான வழக்குரிமைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

*******************